டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 10.09.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 070- Madurai | Online Edition

# காரீஃப் பருவத்தில் 1086.31 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது

புது தில்லி, செப்.9

நாடு முழுவதும் 04.09.2026 ஆம் தேதி நிலவரப்படி காரீஃப் பருவத்தில் 1086.31 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், பருப்பு வகைகள், சணல் மற்றும் மெஸ்தா ஆகியவற்றின் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது.

பருப்பு வகைகள் 117.13 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும், சணல் மற்றும் மெஸ்தா 6.34 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும் பயிரிடப்பட்டுள்ளன. பருப்பு வகைகள் சாகுபடி உத்தரப் பிரதேசம், ஜார்க்கண்ட், தெலங்கானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் கணிசமாக உயர்ந்துள்ளது.

அதேநேரத்தில் நெல் சாகுபடி 421.82 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. கர்நாடகா, தெலங்கானா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்ததே இதற்கு முக்கியக் காரணமாகும்.

ஸ்ரீ அன்னா மற்றும் சிறுதானியங்கள் 181.39 லட்சம் ஹெக் டேரிலும், எண்ணெய் வித்துக்கள் 191.99 லட்சம் ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

கரும்பு சாகுபடி 58.47 லட்சம் ஹெக்டேராகவும், பருத்தி சாகுபடி 109.17 லட்சம் ஹெக்டேராகவும் பதிவாகியுள்ளது. ராஜஸ் தான், ஹரியானா ஆகிய மாநிலங்களில் பருத்தி பயிரிடப்பட்ட பரப்பளவு குறைந்துள்ளது.

# சமச்சீர் உரமிடுதல் மற்றும் உர பயன்பாட்டுத்திறன் பயிற்சி




விழுப்புரம், செப்.9

விழுப்புரம் மாவட்டம், காணை வட்டாரம், சாணிமேடு கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) பால முருகன், ஆலோசனை படி வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் சமச்சீர் உரம் இடுதல் மற்றும் உரம் பயன்பாட்டுத்திறன் பற்றி பயிற்சி நடத்தப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் விஜயசாரதி வரவேற்புரை அளித்தார்.

இப்பயிற்சிக்கு வேளாண்மை அலுவலர் இந்துமதி முன்னிலை வகுத்தார். அதனைத் தொடர்ந்து பயிர்களின் தேவை மண்ணின் வளநிலை மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளுக்கு ஏற்ப அனைத்து அத்தியவாசிய ஊட்டச்சத்துகளையும் சரியான விகிதத்தில் வழங்குதல் பற்றி அறிவுறுத்தினார்.

மேலும் முக்கியத்துவம் மற்றும் நன்மைகளாக மண்ணின் ஆரோக்கிய மற்றும் உயிரியல் சமநிலை நீண்ட காலத்திற்கு பாதுகாக்கப்படுகிறது. பயிர்களுக்கு தேவையான சத்துக்கள் சீராக கிடைப்பதால் பயிர் வளர்ச்சி தூண்டப்பட்டு உற்பத்தி அதிகரிக்கிறது. உரங்கள் வீணாவது தடுக்கப்பட்டு நிலத்தடி நீர் மாசுபடுவது மற்றும் காட்டில் பசுமை இல்லாத வாயுக்கள் கலப்பது குறைகிறது என்ற முக்கிய தகவல் கூறினார்.

மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். உதவி தோட்டக்கலை அலுவலர் நீலவேணி, வேளாண் திட்டப் பணிகள் வேளாண் மானியங்கள் பற்றிய விவரங்களை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஷ் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சிவானந்தம் ஏற்பாடு செய்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தளிர் கீரைகள் வளர்ப்பு மற்றும் மதிப்புகூட்டல் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், செப்.9

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கோயம்புத்தூர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் காய்கறி அறிவியல் துறையின் சார்பாக வரும் 25.09.26 (வெள்ளி) அன்று தளிர்கீரைகள் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது.

மனித உடல்நலத்திற்கு தேவையான பெருமளவுசத்துத் தேவையை தளிர்கீரைகள் நிறைவு செய்கின்றன. தளிர் கீரை களிலிருந்து பெறப்படும்மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஊட்டச்சத்து நிறைந்தவையாகவும் உடல் நலத்தை மேம்படுத்துவதாகவும் உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு தளிர்கீரைகள் சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த திறன் பயிற்சி தொழில் முனைவோருக்கு வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் கீழ்க்கண்ட தலைப்பு களில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

- செயல்முறை சாகுபடித்திறன்கள்
- ஊட்டச்சத்து நன்மைகள்
- உணவுப்பாதுகாப்பு வழிமுறைகள்
- வணிகத்துக்கு வழிகாட்டல்
- தரநிலை நிறுத்தம்
- நீடித்த வருவாய்
- மதிப்பு கூட்டல்
- சந்தை வாய்ப்புகள்

பயிற்சியானது, காய்கறி அறிவியல் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பேருந்து நிறுத்தம் : வாயில் எண் 07 (தாவரவியல் பூங்கா), மருதமலை சாலை, (காந்திபுரத்தி லிருந்து 1A, 1B, ID, 70,76,64ம், தொடர்வண்டி நிலையத்திருந்து, சிங்காநல்லூரில் இருந்து 1 C) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003ல் நடைபெறும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் கட்டணம் ரூ.2000 /- (சரக்கு மற்றும் சேவை வரி 18% உள்படட) செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறி அறிவியல் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர். மின்னஞ்சல் : vegetables@tnau.ac.in, கைபேசி : 89036 94612, தொடர்பு நேரம் : திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 9.00 முதல் மாலை 5.00 வரை) தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**35. மட்டன் கிளியர் சூப்**

**தேவையான பொருட்கள்**

மட்டன் – 250 கிராம்

இஞ்சி – சிறிய துண்டு

பூண்டு – 5 பல்

மிளகு – 1 டீஸ்பூன்

உப்பு – தேவையான அளவு

**செய்முறை**

மட்டனை இஞ்சி, பூண்டுடன் வேக வைத்து வடிகட்டி மிளகு, உப்பு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் அங்கக வேளாண்மை பயிற்சி




சேலம், செப்.9

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி அங்கக வேளாண்மை என்ற தலைப்பில் அயோத்தியாபட்டிணம் வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா தலைமையில் டி.பெருமாபாளையம் கிராமத்தில் நடைபெற்றது. அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்செல்வி, விவசாயிகளை வரவேற்று அட்மா திட்டம் குறித்து விளக்கம் அளித்தார். இயற்கை வேளாண்மை பயிற்றுநர் முருகேசன், சிறப்பு பயிற்சியாளராக கலந்து கொண்டு விவசாயிகள் நிலத்தில் பல தானிய விதைகளை விதைத்து அதனை பூப்பூக்கும் தருணத்தில் மடக்கி உழும்படியும், அதன் மூலம் மண்வளம் பெருகும் எனவும், நஞ்சற்ற உணவு உற்பத்தியின் அவசியம், உயிர் உரங்களின் பயன்பாடு, உயிர் உர விதை நேர்த்தி குறித்து விளக்கம் அளித்தார். அங்கக வேளாண்மை சான்றிதழ் பெறும் முறைகள் மற்றும் பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மீன் அமிலம், தேமோர் கரைசல், ஐந்திலை கரைசல், பூச்சி விரட்டிகள் ஆகிய வற்றை தெளித்து பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, இயற்கை விவசாயத்தின் முக்கியத் துவம், மண்வளத்தை பாதுகாத்தல், விவசாயிகள் அடையாள எண் பெறுவதன் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்தார்.

பயிற்சியில் அயோத்தியாபட்டிணம் பண்ண வட்டாரத்தைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி, தமிழ்ச்செல்வி மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர் செய்து இருந்தனர்.

# நுண்கீரைகள் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி



மதுரை, செப்.9

மதுரை, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஒரு நாள் பயிற்சியாக நுண்கீரைகள் என்னும் தளிர்கீரைகள் அதாவது (Microgreens) வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றிய செயல் விளக்க பயிற்சியானது நடைபெற்றது. பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் கி.சுரேஷ், துவக்கி வைத்து தன்னுடைய தலைமை உரையில் நுண்கீரைகளின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். முனைவர் ப.அருள் அரசு, வரவேற்புரை வழங்கி நுண் கீரைகள் வளர்க்க விதைகள் தேர்ந்தெடுக்கும் முறை அதை வளர்க்க தயாரிக்கும் ஊடகங்கள் தயாரிக்கும் முறை அவற்றின் pH தன்மை மற்றும் வளர்க்கும் முறைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, நுண் கீரைகளை வளர்க்க தேவையான செயல்முறை பயிற்சி வழங்கினார். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஊட்டச்சத்து விஞ்ஞானியான முனைவர் கி.ஜோதிலட்சுமி, நுண் கீரைகளில் உள்ள ஊட்டச் சத்துக்கள் பயன்படுத்தும் முறைகள் மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றிய செயல்முறை விளக்கங்களை வழங்கினார். ஆர்.என்.ஆர்.அக்ரி டெவலப்பர்ஸ். முனைவர் ராஜேஷ் நல்லையா கலந்து கொண்டு நுண்கீரைகள் (மைக்ரோகிரீன்ஸ்) சந்தை வாய்ப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் இந்நிலையத்தின் விஞ்ஞானிகளான முனைவர் கு.ஆனந்த், முனைவர் இ.சுப்பிரமணியன், முனைவர் செல்வராணி மற்றும் டாக்டர் சரவணன் பங்கெடுத்து சிறப்பித்தனர்.

இப்பயிற்சியில் சேலம், சிவகங்கை, திருவாரூர், திண்டுக்கல், சென்னை, திருப்பூர், மயிலாடுதுறை மற்றும் மதுரை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சி நிறைவில் பங்கு பெற்ற விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு பங்கு பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சம்பா பருவத்திற்கு ஏற்ற புதிய நெல் இரகங்கள்

பெரம்பலூர், செப்.9

சம்பா பட்டம் என்பது தமிழ்நாடு விவசாய நிலங்களில், நெல் விதைப்பு அல்லது நடவு தொடங்கும் காலத்தையும் மற்றும் சாகுபடி கால அளவையும் குறிக்கும் நெல் பருவமாகும். ஜீலை–ஆகஸ்ட் (ஆடி–ஆவணி) மாதங்களில் துவங்கும் இப்பருவம் டிசம்பர்–ஜனவரி (மார்கழி–தை) மாதங்களில் முடிவடைகிறது. 130–135 மற்றும் 150 நாட்களுக்கு மேல் கொண்ட இந்த சம்பா பருவம் மத்திய காலம் மற்றும் நீண்ட கால நெல் வகைகளை சாகுபடி செய்ய ஏற்ற பருவமாகும்.

சம்பா பருவத்திற்கு பயன்படுத்தப்படும் நெற் பயிர்கள் நன்றாக வளர்ந்து பலன் தருவதற்கு தரமான விதைகள் பயன்படுத்துவது மிக அவசியமாகும். தரமான விதைகளைப் பயன்படுத்துவதால் 15–20 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும். இதனை கருத்தில் கொண்டு விவசாயிகள் கடந்த பருவமழையால் கிணறு, ஏரி மற்றும் குளங்களில் சேமித்துள்ள நீரை பயன்படுத்தி நெல் சாகுபடி செய்யலாம். சம்பா பருவத்திற்கு ஏற்ற இரகங்கள் ஏ.எஸ்.டி–19, ஏ.டி.டீ–38, ஏ.டி.டீ–39, ஏ.டி.டீ–46, ஏ.டி.டீ–50, ஏடிடீ–51, ஏடிடீ–52, கோ–43, கோ(ஆர்)–50, வெள்ளைப் பொன்னி, சிஆர் 1009, சிஆர்1009, சப்–1, டிஆர்ஓய்–1, டிஆர்ஓய்–3 ஆகும்.

**கோ 59**



மேலும் புதிய இரகங்களான கோ 57, கோ 58, கோ 59 மேம்படுத்தப் பட்ட சம்பா மசூரி போன்றவை சம்பா பருவத்திற்கு ஏற்றதாகும். மேம்படுதப் பட்ட கருப்பு கவுனி அரிசியான கோ 57 நெல் வகை 135 முதல் 140 நாட்கள் வரை வளரும் தன்மை கொண்டது. இப்பயிர் நீரிழிவு நோய்க்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது. கோ 58 நெல்லின் அறுவடை காலம் 120 முதல் 125 நாட்கள் ஆகும். இது தமிழ்நாட்டில் தாமதமான சம்பா அல்லது தாளடி பருவத்திற்கு ஏற்ற நடுத்தர கால பயிராக அமைகிறது. இந்த இரகம் நறுமணமுள்ள நுண்ணிய தானிய அரிசி வகை ஆகும். இந்த இரண்டு இரகங்களும் அதிக மகசூல் தர கூடியவை.

கோ 59 என்பது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் 2025ம் ஆண்டு வெளியிடப்பட்ட புதிய நெல் ரகம். இதன் கால அளவு சுமார் 125-130 நாட்கள் ஆகும். நடுத்தர நீள அரிசியான கோ 59 நல்ல பராமரிப்பில் அதிக மகசூல் தரக்கூடியது (BPT 5204 இரகத்தைவிட 15 சதவீதம் அதிக மகசூல்) மற்றும் பாசன வசதி உள்ள பகுதிகளுக்கு ஏற்றது. கோ 59 நெற்பயிர்கள் வறட்சியை தாங்கும் பண்பு மற்றும் குறைந்த உயரம் கொண்ட ரகம் ஆகும். இதனால் பயிர் சாய்ந்து விழுதல் (Lodging) குறையும். மேம்படுத்தப்பட்ட சம்பா மசூரியின் அறுவடை காலம் 135 முதல் 140 நாட்கள் ஆகும். பாக்டீரியா இலைகருகல் நோய்க்கு (BLB) எதிர்ப்பை இணைத்து, அசல் சம்பா மசூரியின் சிறந்த சமையல் மற்றும் தானிய தரத்தை தக்கவைத்து கொள்கிறது.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூரை தலைமையிட மாகக் கொண்டு விதைச் சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்விதை பரிசோதனை நிலையத்தில் விதைச்சான்று துறையிடமிருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள் விதை ஆய்வாளர்களிடம் இருந்து பெறப்படும் ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் விவசாயிகள், விற்பனையாளர்கள், விதை உற்பத்தியாளர்கள் ஆகியவர்களிட மிருந்து பெறப்படும் பணி விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகிறது. விதையின் தரத்தை அறிந்திட முளைப்புத் திறன், ஈரப்பதம், புறத் தூய்மை மற்றும் பிற இரக கலப்பு ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

தரமான நெல் விதை என்பது குறைந்தபட்சம் 80 சதவீதம் முளைப்பு திறனும், குறைந்தபட்சம் 98 சதவீதம் புறந் தூய்மையும், அதிகபட்சமாக 13 சதவீதம் ஈரப்பதமும், அதிக பட்சமாக 0.05 சதவீதம் பிற இரகக் கலவனும் இருத்தல் அவசியம். விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/-பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டு களுடன், நெல் விதைகள் 400 கிராம் அனுப்பி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம். ஆய்வறிக்கை முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை விதைப்பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர்கள் ரெ.ஆஷாலதா மற்றும் ரா.அம்பிகா அகியோர் தெரிவித்துள்ளனர்.

# ‘நுண்கீரை உற்பத்தி மற்றும் மதிப்பூட்டுதல் தொழில்நுட்பங்கள் பற்றிய தொழில்முனைவோருக்கான பயிற்சி‘




கன்னியாகுமரி, செப்.9

நுண்கீரை என்பது காய்கறிகள், கீரைகள், தானியங்கள் மற்றும் பயறுவகைகளின் இளம்தளிர்கள் ஆகும். இவை முழுமையாக வளர்ந்த செடிகளை விடவும், முளைகட்டிய பயறுகளை விடவும் மற்றும் சிறுதானியகளை விடவும் (கம்பு மற்றும் கேழ்வரகு) வேறுபட்டவை. இவ்வகைச் செடிகளில் 1 முதல் 3 அங்குல உயரம் வரை வளரும் போது அறுவடை செய்யப்படுபவையே நுண்கீரை ஆகும். விதைத்த 1 முதல் 7 நாட்களுக்குள் இவை அறுவடைக்கு தயாராகிவிடும்.

நுண்கீரைகளில் அதிக அளவு ஊட்டச்சத்துக்கள் நிறைந்து உள்ளது. நுண்கீரைகளின் முக்கியத்துவம், பயன்படுத்தும் முறை நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பூட்டுதல் குறித்த பயிற்சி மற்றும் செயல்விளக்கம் கன்னியாகுமாரி மாவட்டம், திருப்பதிசாரம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் செயல் விளக்கப் பயிற்சி இரண்டு நாட்கள் (03 மற்றும் 09.09.26) நடைபெற்றது. இத்தொழில்முனைவோர் இச்செயல்விளக்க பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் சா.சுரேஷ், துவக்கி வைத்து நுண்கீரையின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

முனைவர் ஜெ.செல்வி, உதவிப் பேராசிரியர் (உணவியல் மற்றும் சத்தியல் துறை) நுண்கீரை உற்பத்தி தொழில்நுட்பங்கள், நுண்கீரை வளர்ச்சி நிலைகளின் தொழில்நுட்பங்கள், அறுவடை பின்சார் மற்றும் உலர்த்தும் தொழில்நுட்பங்கள் குறித்து செயல் விளக்கத்துடன் விளக்கினார். மேலும் இப்பயிற்சியில் நுண்கீரை களில் உள்ள சத்துக்கள், ஆரோக்கிய நன்மைகள் குறித்தும், மற்றும் நுண்கீரைகளிலிருந்து மதிப்பூட்டப்பட்ட சத்தான உணவுப்




பொருட்களான சாலட் வகைகள், கோதுமை புல் ஜீஸ் மற்றும் சூப் மிக்ஸ் தயாரித்தல் குறித்தும் செயல்விளக்கத்துடன் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இத்தொழில் முனைவோர் செயல்விளக்க பயிற்சியில் 10 பண்ணை மகளீர்கள், சுயஉதவிகுழு உறுப்பினர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.




# எல்-நினோ தாக்கத்தால் தென்மேற்கு பருவமழை வலுவிழக்கிறதா? எப்படி?



தென்மேற்கு பருவ மழைக்காலம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் முதல் செப்டெம்பர் மாதம் வரை நீடிக்கும். இந்த பருவ மழைக்காலத்தில், வழக்கமாக பெய்யும்,மழையை விட இந்த ஆண்டு சுமார் 15% குறைவாக பெய்யக்கூடும் என்று வானிலை (IMD) மையம் எச்சரிக்கை செய்துள்ளது. இது உறுதி செய்யப்பட்டால் 2009க்கு பிறகு மிகக் குறைவாக பதிவாகும் தென்மேற்கு பருவ மழையாக இது இருக்கும்.

**இந்தியா வானிலை ஆய்வுத் துறை கூறுவதென்ன?**

இந்திய வானிலை ஆய்வுத் துறை ஏப்ரல் மாதம் வெளியிட்ட முதல் கணிப்பில் இந்த ஆண்டு பருவமழை சாரசரியாக 92% இருக்கும் என்று தெரிவித்தது. பின்னர் மே மாதத்தில், இது 90%யாக குறைக்கப்பட்டது.

**எல்–நினோ தாக்கம் எப்படி?**

இந்த மழை பற்றாக்குறையாக முக்கிய காரணங்களில் ஒன்றாக எல்–நினோ கருதப்படுகிறது. பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் கடல் நீரின் வெப்ப நிலை வழக்கத்தை விட அதிகரிக்கும் போது ஏற்படும் காலநிலையை தான் நாம் எல்–நினோ என்று சொல்லுகிறோம். இந்த ஆண்டு பருவமழை காலத்தில் எல்–நினோ உருவாகி தற்போது வலுப் பெற்று, விடுகிறது. இதனால் பருவ மழை பாதிக்கப்படுகிறது.

**எவ்வளவு மழை குறைந்துள்ளதாக தெரிகிறது?**

இந்த மாத நிலவரப்படி, ஜூன் 1ந் தேதி முதல் இந்தியாவில் மொத்த வழக்கமான, அளவை (மழையை) விட 13% குறைவாக உள்ளது. ஆனால் ஜூலை மாதத்தில் வழக்கத்தைவிட ஒரு சதவிதம் அதிகமாக மழை பெய்தால் நிலைமை சற்று மேம் பட்டது. ஆனால் கடந்த மாதம் (ஆகஸ்ட்) மாதத்திலும் மழை

குறைவாகவே இருந்தது. இதனால் தான் ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில், நாட்டின் பல பகுதிகளில் வழக்கத்தை விட குறைவாக மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வுத்துறை தெரிவிக்கிறது.

**இதனால் விவசாயம் பாதிக்குமா?**

இந்தியாவை பொருத்தவரை ஜுன் முதல் செப்டெம்பர் வரையிலான காலத்தில், தென்மேற்கு பருவ மழை சுமாராக 70% வரை மழை கிடைக்கிறது. அப்படியிருக்கையில் மழை குறைந்தால் விவசாயம் பாதிக்கப்படலாம்.

குறிப்பாக, இந்த மாதத்தில் (SEPTEMBER) போதிய மழை இல்லாவிட்டால் பருத்தி,மக்காசோளம், பயறு வகைகள் போன்ற பயிர்களின் விதைப்பு வளர்ச்சி பாதிக்ககூடும். மேலும் குளிர் காலத்தில் பயிரிடப்படும் கோதுமை மற்றும் எண்ணெய் வித்துகளுக்கு தேவையான மண்ணின் ஈரப்பதமும் குறையக் கூடும். இதனால் உணவுப்பொருட்களின் விளைச்சல் குறையும். அதனால் விலைவாசியும் உயரும்.

**பருவ மழை முன்கூட்டிய விலகுமா?**

வடமேற்கு இந்தியாவில் பருவ மழை வழக்கத்தைவிட சில நாட்களுக்கு முன்பாகவே விலகத் தொடங்கலாம் என்று தகவல் கூறுகின்றன. ஆனால் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி போன்ற சாதகமான வானிலை அமைப்புகள் உருவானால் இந்த நிலைமை மாறுவதற்கான வாய்ப்புள்ளதாக தெரிகிறது. எனினும் இந்த ஆண்டு பருவமழை வழக்கத்தைவிட குறைவாகவே பதிவாகியுள்ளன.

எல்-நினோ வலுப்பெற்றால் இந்த மாதத்தில் (றீசிஊணவீசினி-யசியூ) மழை குறையக்கூடும். எனினும் இந்த மாத மழை நிலவரத்துக்கு பிறகு இந்த ஆண்டிற்கான பருவ மழை எவ்வளவு குறைந்துள்ளது என்பது தெளிவாக தெரியும் என வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நெல் மற்றும் பயறுவகை பயிர் சாகுபடிக்கான சிறந்த வேளாண் நடைமுறைகள் மற்றும் மாற்று பயிர் பயிரிடல் முறை பற்றிய வெளிவளாக பயிற்சி



கடலூர், செப்.9

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் மற்றும் வேளாண்மை துறை, குமராட்சி சார்பாக 09.09.26 அன்று குமராட்சி வட்டாரம், நந்திமங்கலம் கிராமத்தில் நெல் மற்றும் பயறுவகை பயிர் சாகுபடிக்கான சிறந்த வேளாண் நடைமுறைகள் பற்றிய மற்றும் மாற்று பயிர் பயிரிடல் முறை பற்றிய வெளிவளாக பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க. நடராஜன், துவக்கி வைத்து, சிறந்த வேளாண் தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் குமராட்சி வேளாண்மை உதவி இயக்குநர் தெ. தமிழ்வேல், தலைமை தாங்கி மாற்று பயிர் பல்வகை படுத்துதல் முக்கியத்துவத்தை விளக்கினார். விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி முனைவர் கோ.சத்தியநாரயணன், கலந்துக் கொண்டு நெல் மற்றும் பயறு வகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள், விதை அமிர்தம், உயிர் விதை நேர்த்தி மற்றும் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சியில் ஒருங்கிணைந்த பண்ணைய முறை, மாற்று பயிர் பயிரிடல், பயிர்களை மதிப்பு கூட்டுதல், மண்வள பாதுகாப்பு மற்றும் மேலும் நெல், பயறுவகை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியில் அத்மா திட்ட வேளாண்மை அலுவலர் கல்பனா, வேளாண்மை அலுவலர்கள் பிரவின், எட்வின் ஆனால்டு ஆகியோர் இப்பயிற்சியில் கலந்துக் கொண்டனர். இறுதியாக வேளாண்மை அலுவலர் நடராஜன் நன்றியுரை வழங்கினார். இப்பயிற்சியில் நந்திமங்கலம் கிராமத்தை சேர்ந்த 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இப்கோ நானோ டி.ஏ.பி – பசுமை வளர்ச்சிக்கான நம்பிக்கைக்குரிய நண்பன்

சென்னை, செப்.9

இப்கோவின் நவீன நானோ தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட நானோ டி.ஏ.பி. இந்திய அரசு அங்கீகரித்த 8% தழைச்சத்து மற்றும் 16% மணிச்சத்து கொண்ட திரவ உரமாகும். இது வழக்கமான குருணை டி.ஏ.பி.யைவிட திறமையானது மற்றும் மகசூல் அதிகரிக்கவல்லது.

**பயன்படுத்தும் முறைகள்**

**விதை நேர்த்தி :** 1 கிலோ விதைக்கு தேவையான அளவு நீரில் 5 மி.லி. நானோ டி.ஏ.பி. கலந்து 20-30 நிமிடங்கள் ஊறவைத்து, நிழலில் உலர்த்திபின் விதைக்கவும்.

**வேர் அல்லது கிழங்கு நேர்த்தி :** 1 லிட்டர் நீரில் 5 மி.லி. நானோ டி.ஏ.பி. கலந்து, கிழங்கு அல்லது வேர் பகுதிகளை 20-30 நிமிடங்கள் ஊறவைத்து நடவு செய்யவும்.

**இலைவழி தெளிப்பு :** முக்கிய வளர்ச்சி பருவங்களில், 5 மி.லி. நானோ டி.ஏ.பி.யை 1 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். இப்படி செய்தல் அதிகபட்ச பயன் திறன் கிடைக்கும்.

**நன்மைகள்**

1. குருணை டி.ஏ.பி.யைவிட குறைந்த விலையில் கிடைக்கும்.
2. சிறிய பாட்டில் (500 மி.லி.) விலை ரூ.600 மட்டுமே!
3. எடுத்துச் செல்ல எளிது.
4. மண், நீர், காற்று மாசுபாட்டைக் குறைக்கும்
5. அனைத்து வகையான பயிர்களுக்கு ஏற்றது. நெல் முதல் நாவல் வரை!

இது வெறும் உரம் அல்ல, இது ஒரு பசுமைக்கான மாற்றம்! இப்போது உங்கள் வயலிலும், நவீன நானோ டி.ஏ.பி.யை தேர்வு செய்து பயன்படுத்துங்கள்.

இப்கோ நானோ டி.ஏ.பி. விவசாயியின் நம்பிக்கைக்குரிய தோழன்!



# விவசாயிகள் நுண்ணீர் பாசன மானிய திட்டத்தில் பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு

செங்கல்பட்டு, செப்.9

செங்கல்பட்டு மாவட்ட விவசாயிகள் வேளாண் பயிர்களுக்கு பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத் திட்டத்தில் மானியம் பெற்று பயனடையலாம் என வேளாண்மை இணை இயக்குநர் எம்.ஸ்டீபன் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது, செங்கல்பட்டு மாவட்டத்தில் தற்போது 350 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.1.62 கோடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஆதி திராவிடர் பிரிவினருக்கு 70 எக்டர் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 5 ஏக்கர் பரப்பளவு வரையுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும். பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படும்.

மேலும், சொட்டு நீர் பாசனத்தின் முக்கியமான சிறப்பம்சம் பாசன நீர் சேமிப்பாகும். மற்ற பாசன முறைகளைக் காட்டிலும் சொட்டுநீர் பாசனத்தில் அதிகளவில் நீர் சேமிக்கப்படுகிறது. பயிரிடப்பட்டுள்ள பரப்பளவில் சொட்டு நீர்பாசனம் மூலம் நீர் பாசனம் செய்யும் போது, வாய்க்கால் வழி நீர் விரயம் முற்றிலும் தவிர்க்கப்படுவதன் மூலம் நுண்ணீர் பாசன நீர் 50 முதல் 60 விழுக்காடு வரை சேமிக்கப்படுகிறது.

மேலும், இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால் நீர் பயன்பாட்டு திறன் அதிகரித்து அதிக விளைச்சல் அளிப்பதற்கும், உர பயன்பாட்டில் சிக்கனம் ஏற்படவும், பயிர் விளைச்சல் சீராகவும், ஒரே சமயத்தில் முதிர்ச்சியடையவும், களை வளர்ச்சி மற்றும் பூச்சி, பூஞ்சாண தாக்குதல் குறைவாக உள்ளதென அறியப் பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசனம் செய்யப்படுவதால் சமமற்ற நிலத்திலும் சீராக நீர் பாய்ச்சப்படுகிறது.

எனவே, விவசாயிகள் அனைவரும் சொட்டு நீர்பாசனம், மழை துவான் மற்றும் தெளிப்பு நீர் பாசனத்தின்பயன்களை அறிந்து, இத்திட்டத்தில் பயன் பெற வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு சொட்டு நீர்பாசனம் அமைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# விவசாயிகளுக்கு 'மண் மூடாக்கு' தொழில்நுட்ப விழிப்புணர்வு முகாம்



திருச்சி, செப்.9

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், செம்பரை கிராமத்தில் கிராமப்புற விவசாயப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பயின்று வரும் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி மாணவர்கள் ஹஸ்வத்தா பத்மராஜ், அருந்ததி, கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி, மௌனிகா, விவசாயிகளுக்கு 'மண் மூடாக்கு போடுதல் தொழில் நுட்பம் குறித்த விழிப்புணர்வு முகாம் ஒன்றை நடத்தினர்.

தற்போதைய வறட்சி மற்றும் நீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள இந்த எளிய மற்றும் பயனுள்ள தொழில்நுட்பம் எவ்வாறு உதவும் என்பதை செயல்விளக்கம் மூலம் மாண வர்கள் விவசாயிகளுக்கு விளக்கினர். விவசாய நிலத்தில் பயிர்கள் வளரும் போது, செடிகளைச் சுற்றியுள்ள வெற்று மண் பகுதியை இயற்கை அல்லது செயற்கைப் பொருட்களைக் கொண்டு மூடி வைக்கும் முறைக்கு 'மண் மூடாக்கு' என்று பெயர். சூரிய ஒளி நேரடியாக மண்ணில் படுவதைத் தடுப்பதன் மூலம் மண்ணின் வளம் மற்றும் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகிறது. மாணவர்கள் மூடாக்கு முறையை இரண்டு முக்கிய வகை களாகப் பிரித்து விளக்கினர்.

இயற்கை மூடாக்கு பொருட்கள் நெல் வைக்கோல், காய்ந்த இலைகள், கரும்புத் தோகை, தேங்காய் நார்க் கழிவு, மரத்தூள் மற்றும் காய்ந்த புற்கள், செயற்கை அல்லது பிளாஸ்டிக் மூடாக்கு கருப்பு, வெள்ளி அல்லது இரு வண்ண பிளாஸ்டிக் தாள்கள் மற்றும் பழைய செய்தித்தாள்கள், மண் மூடாக்கு போடுவதால் கிடைக்கும் நன்மைகள், ஈரப்பதம் பாதுகாப்பு, களைக் கட்டுப்பாடு, மண் அரிப்பு தடுப்பு, மண் வெப்பநிலை சீராக்கம், மண் வளம் மேம்பாடு, பயிர் விளைச்சல் அதிகரிப்பு, பூச்சிகள் மற்றும் நோய் கட்டுப்பாடு, காய்கறிகள் மற்றும் பழங்கள் நேரடியாக மண்ணில் படாமல் இருப்பதால், அழுகல் நோய் இன்றி சுத்தமான தரமான விளை பொருட்களைப் பெறலாம்.

# குறைந்த நீரில் கை கொடுக்கும் சிறுதானியங்கள்!

## வறட்சியையும் சமாளித்து வருமானம் தரும் சாகுபடி தொழில்நுட்பங்கள்


**சிறுதானிய சாகுபடிக்கு முக்கியத்துவம்**

தமிழகத்தில் மழைப்பொழிவு குறைவாக உள்ள பகுதிகளில் விவசாயிகளுக்கு சிறுதானியங்கள் சிறந்த மாற்றுப் பயிர்களாக உள்ளன.



குறைந்த நீரிலும், வறட்சியான சூழ்நிலையிலும் வளரக்கூடிய தன்மை கொண்டதால், மானாவாரி நிலங்களுக்கு இவை மிகவும் ஏற்றவை. கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, வரகு, குதிரைவாலி, பனிவரகு ஆகியவை தமிழகத்தில் முக்கியமாக பயிரிடப்படும் ஊட்டச்சத்து தானியங்களாகும். குறுகிய காலத்தில் அறுவடைக்கு வருவதுடன், குறைந்த நீரில் வளரக்கூடிய தன்மையும் இவற்றுக்கு உண்டு.

## நிலம் தயாரிப்பு



சிறுதானியங்களுக்கு நல்ல வடிகால் வசதியுள்ள நிலம் ஏற்றது. நிலத்தை நன்கு உழவு செய்து மண்ணை பொலபொலப்பாக மாற்ற வேண்டும். களைகளை அகற்றி, நன்கு மக்கிய தொழுஉரம் அல்லது இயற்கை உரம் இடுவது அவசியம். மானாவாரி நிலங்களில் மழை நீரை சேமிக்கும் வகையில் வரப்புகள் அமைப்பதுடன், மண்ணில் ஈரப்பதத்தை பாதுகாப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

## தரமான விதைகள் அவசியம்

அதிக மகசூல் தரக்கூடிய, நோய் மற்றும் பூச்சித் தாக்குதல்களைத் தாங்கக் கூடிய தரமான விதைகளை விவசாயிகள் தேர்வு செய்ய வேண்டும். விதைகள் சுத்தமாகவும், நல்ல முளைப்புத்திறன் கொண்டதாகவும், அந்தப் பகுதி மற்றும் பருவத்திற்கு ஏற்ற இரகமாகவும் இருக்க வேண்டும். சான்றளிக்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்துவது சிறந்தது.

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் ஊட்டச்சத்து தானியங்களில் பல்வேறு முக்கிய இரகங்கள் உள்ளன. கம்பில் கோ 7, கோ (கு) 9, கோ (கு) 10, எக்ஸ் 7, ஐ.சி.எம்.வி. 221 மற்றும் டி.என்.ஏ.யூ. கம்பு வீரிய ஒட்டு கோ 9 ஆகிய இரகங்கள் குறிப்பிடத்தக்கவை. சோளத்தில் கோ (எஸ்) 28, கோ (எஸ்) 30, கோ (எஸ்) 32, கே 11, கே 12 மற்றும் சி.எஸ்.வி. 20 ஆகிய இரகங்கள் உள்ளன. கேழ்வரகில் கோ 13, கோ (ரா) 14, கோ 15, பையூர் (ரா) 2, ஜி.பி.யூ. 67, ஜி.பி.யூ. 28, எம்.எல். 365 மற்றும் கே.எம்.ஆர். 301 ஆகிய இரகங்கள் முக்கியமானவை. வரகில் கோ 3, ஏ.பி.கே. 1, வம்பன் 1 மற்றும் டி.என்.ஏ.யூ. 86 ஆகிய இரகங்கள் உள்ளன. சாமையில் கோ (சாமை) 4, பையூர் 2 மற்றும் ஏ.டி.எல். 1 ஆகியவை குறிப்பிடத்தக்க இரகங்களாகும். தினையில் கோ 6, கோ (தே) 7 மற்றும் ஏ.டி.எல். 1

ஆகிய இரகங்கள் உள்ளன. குதிரைவாலியில் கோ 1, கே 1, கே 2, கோ (குவி) 2 மற்றும் எம்.டி.யூ. 1 ஆகிய இரகங்கள் பயிரிடப்படு கின்றன. பனிவரகில் கோ (பவி) 5 உள்ளிட்ட இரகங்கள் உள்ளன.

**விதை நேர்த்தி செய்தால் நல்ல தொடக்கம்**

விதைப்பதற்கு முன் விதை நேர்த்தி செய்வது விதை முளைப்பை அதிகரிக்கவும், ஆரம்ப கட்ட நோய்த் தாக்குதலை குறைக்கவும் உதவும். நாற்றுகளின் வளர்ச்சி சீராகி, வயலில் பயிர் எண்ணிக்கை யையும் நல்ல நிலையில் பராமரிக்க முடியும். அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா போன்ற உயிர் உரங்களை பரிந்துரைக்கப்பட்ட முறையில் பயன்படுத்தலாம்.

**விதை கடினப்படுத்துதல்**

மானாவாரி மற்றும் வறட்சிப் பகுதிகளில் விதை கடினப்படுத்துதல் பயனுள்ள தொழில்நுட்பமாகும். இதில் விதைகளை குறிப்பிட்ட முறையில் நீர் அல்லது ஊட்டச்சத்து கரைசலில் நேர்த்தி செய்து, பின்னர் நிழலில் உலர்த்தி விதைக்கின்றனர். இதனால் முளைப்பு வேகமாகவும் சீராகவும் நடைபெறுவதுடன், குறைந்த மண்ணின் ஈரப்பதத்திலும் பயிர் நிலை பெற உதவுகிறது.

**விதை கடினப்படுத்துதலுக்கான கரைசல் அளவுகள்**

**ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின்படி**

| பயிர் | வேதிப்பொருள் | செறிவு | ஊறவைக்கும் நேரம் |
|---|---|---|---|
| கம்பு | பொட்டாசியம் குளோரைடு (KCl) | 2% | 16 மணி |
| சோளம் | பொட்டாசியம் டை-ஹைட்ரஜன் பாஸ்பேட் ($KH_2PO_4$) | 2% | 6 மணி |
| கேழ்வரகு | கால்சியம் குளோரைடு ($CaCl_2$) | 0.5% | 6 மணி |
| வரகு | பொட்டாசியம் டை-ஹைட்ரஜன் பாஸ்பேட் ($KH_2PO_4$) | 2% | 8 மணி |
| தினை | பொட்டாசியம் டை-ஹைட்ரஜன் பாஸ்பேட் ($KH_2PO_4$) | 2% | 8 மணி |
| சாமை | பொட்டாசியம் டை-ஹைட்ரஜன் பாஸ்பேட் ($KH_2PO_4$) | 2% | 8 மணி |

2% கரைசல் தயாரிப்பு : 1 லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் $KH_2PO_4$.

கம்புக்கு : 1 லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் KCl கலந்து 2% கரைசல் தயாரித்து, விதைகளை 16 மணி நேரம் ஊற வைக்கலாம்.

கேழ்வரகுக்கு : 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் CaCl2 கலந்து 0.5% கரைசல் தயாரித்து, விதைகளை 6 மணி நேரம் ஊற வைக்கலாம். ஊற வைத்த விதைகளை வடித்து, நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும். குறிப்பிட்ட பயிருக்கு நீர் அளவு, ஊற வைக்கும் நேரம் மற்றும் கரைசல் ஆகியவை மாறுபடுவதால், சம்பந்தப்பட்ட வேளாண்மைத் துறை அல்லது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பரிந்துரையைப் பின்பற்றுவது சிறந்தது.

### இயந்திர விதைப்பு

கையால் விதைப்பதுடன், இயந்திர விதைப்பான்களையும் பயன் படுத்தலாம். இயந்திர விதைப்பில் விதைகள் சீரான இடைவெளியில் விழுவதுடன், விதை அளவும் சேமிக்கப்படுகிறது. தொழிலாளர் தேவை குறைவதோடு, பயிர் எண்ணிக்கையை சீராக அமைத்து களை மேலாண்மையையும் எளிதாக்க முடியும்.

### குறைந்த விதை... சரியான இடைவெளி!

சிறுதானிய தீவிர சாகுபடி முறையில் குறைந்த அளவு விதைகளைப் பயன்படுத்தி, சரியான இடைவெளியில் பயிர்களை அமைக்க முடியும். ஆரோக்கியமான நாற்றுகளைத் தேர்வு செய்தல், களை கட்டுப்பாடு, இயற்கை மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு, நீரை சிக்கனமாக பயன்படுத்துதல் ஆகியவை இதில் முக்கிய மானவை. இதன் மூலம் நல்ல வளர்ச்சியையும் அதிக மகசூலையும் பெற முடியும்.

### ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை

சிறுதானியங்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை சரியான அளவில் வழங்க வேண்டும். தொழுஉரம், மண்புழு உரம், பசுந்தாள் உரம், உயிர் உரங்கள்மற்றும் பரிந்துரைக்கப்பட்ட இரசாயன உரங்களைப் பயன்படுத்தலாம். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையைப் பின்பற்றுவதன் மூலம் மண்வளத்தைப் பாதுகாத்து பயிரின் வளர்ச்சியை மேம்படுத்த முடியும்.

### நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

சிறுதானியங்களுக்கு மற்ற தானியப் பயிர்களைவிட குறைந்த நீரே தேவைப்படுகிறது. நீர் வசதி உள்ள பகுதிகளில் சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம்மற்றும் தேவைக்கேற்ப பாசனம் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். மானாவாரி பகுதிகளில் மழை நீர் சேமிப்பு, மண் ஈரப்பதம் பாதுகாப்பு, மூடாக்கு அமைத்தல் மற்றும் சரியான விதைப்பு காலம் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

### களை மேலாண்மை

களைகள் பயிருடன் நீர், ஊட்டச்சத்து மற்றும் சூரிய ஒளிக்காக போட்டியிடுகின்றன. எனவே சரியான நேரத்தில் களை எடுக்க வேண்டும். கைகளை எடுப்பு, களைஎடுக்கும் கருவிகள் மற்றும் வரிசை விதைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். தேவையான இடங்களில் பரிந்துரைக்கப்பட்ட களைக்கொல்லிகளைப் பயன் படுத்தலாம்.

### பூச்சி, நோய்களை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துங்கள்

தரமான விதைகளைப் பயன்படுத்துதல், நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களைத் தேர்வு செய்தல், வயலைச் சுத்தமாக வைத்திருத்தல்மற்றும் பாதிக்கப்பட்ட தாவரங்களை அகற்றுதல் ஆகியவை முக்கியமானவை. உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதுடன், தேவையான போது மட்டும் பரிந்துரைக் கப்பட்ட பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டும்.

### ஊடுபயிரில் கூடுதல் பாதுகாப்பு

சிறுதானியங்களுடன் பருப்பு வகைகளை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதன் மூலம் நிலத்தின் முழுப்பயன்பாட்டை அதிகரிக்கலாம். மேலும் விவசாயியின் வருமானத்தை அதிகரிக்கவும், ஒரே பயிர் தோல்வியால் ஏற்படும் ஆபத்தை குறைக்கவும் இது உதவும்.

சோளம் + துவரை
கம்பு + துவரை
சிறுதானியம் + உளுந்து
சிறுதானியம் + பாசிப்பயறு

### இயந்திரமயமாக்கல் கைகொடுக்கும்

தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க சிறுதானிய சாகுபடியில் இயந்திரங்களைப் பயன்படுத்தலாம். விதைப்பு, களை எடுப்பு, அறுவடை, கதிரடித்தல், சுத்தம் செய்தல் மற்றும் தரம் பிரித்தல் ஆகிய பணிகளுக்கு இயந்திரங்கள் பயன்படுகின்றன. இதன் மூலம் உற்பத்திச் செலவையும் தொழிலாளர் தேவையையும் குறைக்க முடியும்.

### அறுவடையில் தாமதம் வேண்டாம்

பயிர் முழுமையாக முதிர்ந்தவுடன் சரியான நேரத்தில் அறுவடை செய்ய வேண்டும். தாமதமாக அறுவடை செய்தால் தானியங்கள் உதிர்வதுடன், பறவைகள்மற்றும் பூச்சிகளால் சேதம் ஏற்பட்டு தரம் குறையலாம். இதனால் அறுவடை இழப்பும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### அறுவடைக்கு பின் கவனம்

அறுவடை செய்த தானியங்களை சுத்தம் செய்தல், உலர்த்துதல், தரம் பிரித்தல், சேமித்தல், அரைத்தல் மற்றும் பதப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். சரியான ஈரப்பதத்தில் தானியங்களை சேமிப்பது பூச்சி மற்றும் பூஞ்சை தாக்குதலைக் குறைக்க உதவும்.

### மதிப்புக்கூட்டினால் கூடுதல் வருமானம்


சிறுதானியங்களை நேரடியாக விற்பனை செய்வதைவிட மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெற வாய்ப்பு உள்ளது. சிறுதானியமாவு, இட்லி மாவு, தோசை மாவு, பிஸ்கட், ரொட்டி, நூடுல்ஸ், பாஸ்தா, லட்டு, அடை, சத்து மாவு, அவல் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை தயாரிக்க முடியும்.


### விவசாயிகளுக்கு ஏற்ற எதிர்காலப் பயிர்

குறைந்த நீர், குறுகிய கால சாகுபடி, வறட்சியைத் தாங்கும் திறன், குறைந்த இடுபொருள் தேவை மற்றும் சந்தை வாய்ப்பு ஆகியவை சிறுதானியங்களின் முக்கிய பலங்களாக உள்ளன. தமிழகத்தில் மழைப் பொழிவு குறைவாக உள்ள பகுதிகளில் இவை விவசாயி களுக்கு பாதுகாப்பான பயிராக விளங்குகின்றன.

சிறுதானிய உணவுகளுக்கான மக்களின் தேவை அதிகரித்து வருவதால், விவசாயிகளுக்கு புதிய சந்தை வாய்ப்புகளும் உருவாகி வருகின்றன. நவீன விதைப்பு முறை, விதை கடினப்படுத்துதல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை, நீர் சிக்கன தொழில்நுட்பம், இயந்திரமயமாக்கல் மற்றும் மதிப்புக் கூட்டல் ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்தினால் சிறுதானிய சாகுபடியில் உற்பத்தி மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது.

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். 82480 80922.***




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பெருந்துறை வட்டாரத்தில் இயற்கை வேளாண்மை சாகுபடி குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, செப்.9

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை -உழவர் நலத்துறை கீழ்,செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் சின்னவீரசங்கிலி கிராமத்தில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ச.கலைசெல்வி தலைமையில் நடைப்பெற்றது. அவர் பேசுகையில் இயற்கை வேளாண்மையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் பற்றியும் தெளிவாக விளக்கினார். மேலும் இயற்கை விவசாயி கணேசன், பேசுகையில் அங்கக வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகள் பயிர் சுழற்சி மற்றும் அங்கக இடுபொருள் தயாரிக்கும் முறைகள் (பஞ்சகாவ்யா, அமிர்த கரைசல், ஜீவாமிர்தம் மற்றும் பூச்சி மேலாண்மை, களை மேலாண்மை குறித்து விவசாயிகளிடம் கூறினார். இப்பயிற்சியில் குமரகுரு வேளாண் கல்லூரி உதவி பேராசிரியர் செல்வகுமார், பேசுகையில் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.


உதவி வேளாண்மை அலுவலர் ரவிசந்திரன், பேசுகையில் நுண்ணீர் பாசனம் மற்றும் Pg முணையம் பற்றியும் விவரங் களையும் மற்றும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் வேளாண் கிடங்கில் உள்ள இடுபொருட்களின் மானிய விவரங்கள் பற்றியும் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன், அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

# சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய வெளிவளாக பயிற்சி



கடலூர், செப்.9

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம், சார்பாக 09.09.26 அன்று கீரப்பாளையம் வட்டாரம், மதுராந்தக நல்லூர் கிராமத்தில், சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய வெளிவளாக பயிற்சி நடைபெற்றது. விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க. நடராஜன், துவக்கி வைத்தார். விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி முனைவர் க.கலைச்செல்வி (உழவியல் துறை), சம்பா நெல் சாகுபடியில் குறைந்த விதை அளவு பயன்படுத்த வழியுறுத்தினார். செம்மை நெல் சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு, ஒரு சென்ட் நாற்றாங்கால் அமைப்பது போதுமானது மற்றும் புதிய இரகங்களான ADT 62, ADT 51, ADT 58, கோ 56, கோ 57 ஆகிய இரகங்களின் முக்கிய அம்சங்களையும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் சம்பா நெல் சாகுபடியில் உர மேலாண்மை, களை மேலாண்மை பூச்சி நோய் தாக்குதல் ஆகிய அனைத்து தொழில் நுட்பங்களையும் விரிவாக விளக்கினார். இப்பயிற்சியில் கீரப் பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) சிவப் பிரியன் மற்றும் கீரப்பாளையம் வட்டார தொழில்நுட்ப மேலாளர், ஆனந்த செல்வி ஆகியோர் கலந்துக் கொண்டு மத்திய, மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் வெய்யலூர் முன்னோடி விவசாயி இராமதாஸ் கலந்துக் கொண்டு தனது அனுபவங்களை எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் வட்டாரம், மதுராந்தகநல்லூர் கிராமத்தை சேர்ந்த 35-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.



# மண்வள மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி

விழுப்புரம், செப்.9

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டாரம் வேளாண்மை துறை ஆத்மா திட்டத்தின் மூலம் கீழ்புத்துப்பட்டு கிராமத்தில் மண்வள மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.




பயிற்சிக்கு மரக்காணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஆரோக்கியராஜ் தலைமை தாங்கி பேசியதாவது, பயிர் சாகுபடியில் மண்வளத்தின் பங்கு முக்கியமானது எனவும் மண் வளத்தை பாதுகாத்திடவும் மேம்படுத்திடவும் பசுந்தாள் உர பயிர்கள் உபயோகம் நுண்ணுயிர்களின் பயன்பாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து கூறினார்.

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மதனகுமாரி வளம்குன்றா வேளாண்மையில் மண்வளத்தை தக்க வைத்திட அங்கங்க உரங்களான பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம், அமிர்தகரைசல் மீன் அமிலம் உபயோகம் குறித்து விளக்கி கூறினார். விவசாயிகள் தங்களால் உற்பத்தி செய்யப்பட்ட விளை பொருட்களை மதிப்பு கூட்டுதல் செய்து சந்தைப்படுத்துவது குறித்த முறைகளை எடுத்துக் கூறினார். மரக்காணம் வட்டார ஆத்மா தொழில்நுட்ப மேலாளர் நரசிம்மராஜ், உதவி தொழில் மேலாளர் சந்திரசேகர், உதவி வேளாண்மை அலுவலர் தினகரன் மற்றும் கீழ்புத்துப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சுமார் நாற்பது விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396